# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பின்படி கழகத்தலைவர் தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி நாகை மாவட்டத்தில் உள்ள நாகை, வேதாரண்யம், கீழ்வேளூர் ஆகிய சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் முடிவுகள் குறித்த முக்கிய களஆய்வுக் கூட்டம் வரும் 01.06.2026, 02.06.2026, 03.06.2026 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற உள்ளது. தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் எஸ்.டி.இசை, தூத்துக்குடி மாநகர கழக செயலாளரும், மாநகர மேயருமான ஜெகன் பெரியசாமி ஆகியோர் கீழ்க்கண்ட விபரப்படி நேரில் வருகை தந்து இக்கள ஆய்வினை மேற்கொள்ள உள்ளனர்.

அதன் படி 01.06.2026 அன்று வேதாரண்யம் சட்டமன்ற தொகுதிக்கு வேதாரண்யம் சிம்பு மீரா திருமண மண்டபத்தில் காலையில் காலை 10 மணி முதல் மதியம் 1மணி வரை வேதாரண்யம் நகரம், தலைஞாயிறு ஒன்றியம், தலைஞாயிறு பேரூர் ஆகியவற்றிற்கும், வேதாரண்யம் சிம்பு மீரா திருமண மண்டபத்தில் மதியம் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை வேதாரண்யம் கிழக்கு ஒன்றியம், வேதாரண்யம் மேற்கு ஒன்றியத்திற்கும்,

02.06.2026 அன்று திருக்குவளை எம்.வி.கே.திருமண மண்டபத்தில் காலை 10.00 முதல் மதியம் 1.00 மணி வரை கீழையூர் மேற்கு ஒன்றியம் கீழையூர் கிழக்கு ஒன்றியம், வேளாங்கண்ணி பேரூர், கீழ்வேளூர் பேரூர் ஆகியவற்றிற்கும்,

02.06.2026 அன்று திருக்குவளை எம்.வி.கே.திருமண மண்டபத்தில் மதியம் 2.00 மணி முதல் மாலை 6.00 வரை மணி நாகை தெற்கு ஒன்றியம், கீழ்வேளூர் வடக்கு ஒன்றியம், கீழ்வேளூர் தெற்கு ஒன்றியம் ஆகியவற்றிற்கும்

03.06.2026 அன்று நாகை மாவட்ட அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் காலை 10.00 முதல் மதியம் 1.00 மணி வரை நாகை நகரம் நாகூர் நகரம், நாகை வடக்கு ஒன்றியம் ஆகியவற்றிற்கும்,

03.06.2026 அன்று நாகை மாவட்ட அலுவலமான தளபதி அறிவாலயத்தில் மதியம் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை திருமருகல் வடக்கு ஒன்றியம், திருமருகல் தெற்கு ஒன்றியம், திட்டச்சேரி பேரூர் ஆகியவற்றிற்கும் நடைபெறுகிறது.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 29.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## செங்கல்பட்டு — ஓர்க்காட்பேட்டை — ஆத்தூர்

# பாலாற்று மேம்பாலத்தில் விபத்தை ஏற்படுத்தும் மண் குவியல்!

## அகற்ற நடவடிக்கை எடுக்க மக்கள் கோரிக்கை!

செங்கல்பட்டு, மே 30 – பழத்தோட்டம் ஓர்க்காட்பேட்டை மேம்பாலத்தில் விபத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ள மண்குவியல்களை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்துள்ளது. ஓர்க்காட்பேட்டை– ஆத்தூர் பழத்தோட்டம் இடையே கடந்த 30 வருடங்களுக்கு முன்பு பாலாற்றின் குறுக்கே கிராவல் சாலை அமைக்கப்பட்டு இருந்தது.

இந்த சாலை வழியாக ஓர்க்காட்பேட்டை, காவி தண்டலம், காவூர், விச்சூர், திருவானைக்கோயில், பினாயூர், மாம்பாக்கம், சித்தன காவூர், பழவேரி, பேரணக்காவூர், சாத்தனஞ்சேரி, சீதனஞ்சேரி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்தவர்கள் செங்கல்பட்டு பகுதிக்கு பல் வேறு வேலைகளுக்காக வந்து சென்று கொண்டிருந்தனர்.

அவ்வப்போது பாலாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு இந்த சாலை முழுவதுமாக துண்டிக் கப்படும். இதனால் ஓர்க்காட்பேட்டை மற்றும் அதனை சுற்றி யுள்ள பொது மக்கள் செங்கல்பட்டுக்கு 25 கிலோ மீட்டர் சுற்றிக் கொண்டு வருவது வழக்கம். இந்தநிலையில் பொதுமக்கள் வைத்த கோரிக்கையின் பேரில் கடந்த 15 வருடங்களுக்கு முன்பு நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரூ.25 கோடியில் ஓர்க்காட்பேட்டை ஆத்தூர் இடையே பாலாற்று மேம்பாலம் கட்டப் பட்டது.

இதனால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் சிரமமின்றி செங்கல்பட்டு பகுதிக்கும், செங்கல்பட்டில் இருந்து ரயில் மூலம் சென்னை போன்ற பகுதிகளுக்கும் சென்று வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு ஓர்க்காட்பேட்டை, மையூர், பிலாப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் ஏரி மண் டெண்டர் விடப்பட்டதால் அளவுக்கு அதிகமான ஏரி மணல் ஏற்றிக்கொண்டு கனரக லாரிகள் இந்த பாலத்தை பயன்படுத்திச் செல்கின்றன.

இதனால் உபரியான ஏரி மண் பாலத்தில் கொட்டி பாலத்தின் இருபுறங்களிலும் மண் குவியலாக மாறி உள்ளது. பாலத்தில் உள்ள மழைநீர் வெளியேறும் குழாய்களை ஏரி மண் அடைத்து விடுவதால் அவ்வப்போது பெய்யும் மழையால் தேங்கும் மழை நீர் கீழே செல்ல முடியாமல் பாலத்திலேயே தேங்கி நிற்கிறது.

மண் குயிலோடு சேர்ந்து மழை நீரும் வடியாமல் பாலத்தின் மீது தேங்குவதால் இரவு நேரங்களில் பாலத்தை கடக்கும் பொதுமக்கள் சேறும், சகதியிலும் சிக்கி கீழே விழுந்து காயமடைந்து விபத்து அதிகரிக்கும் நிலை ஏற்படுகிறது.

எனவே மேம்பாலத்தின் மேல் குவிந்துள்ள மண்குவியல்களை அகற்றி மழைநீர் வடிவதற்கு உரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும், வெயில் நேரங்களில் பாலத்தின் மீதுள்ள மண் குவியல்கள் வாகனங்கள் செல்லும்போது காற்றில் தூசியாக மாறி வாகன ஓட்டிகளின் கண்களில் படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அளவுக்கு அதிகமாக லாரிகளில் மண் எடுத்துச் செல்வத்தை தடுக்க வேண்டும், மேம்பாலத்தில் குவிந்துள்ள மண் குவியல்களை அகற்ற வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள் படி

# பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள் இணைய தளத்தில் கட்டாயம் பதிய வேண்டும்!

## சென்னை மாநகராட்சி உத்தரவு!

சென்னை, மே 30- திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள் படி, பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள் இணையதளத்தில் பதிவு செய்வது கட்டாயம் என்று சென்னை மாநகராட்சி உத்தரவிட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இந்திய அரசு கடந்த ஜனவரி 28-ஆம் தேதி திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 குறித்த அரசிதழ் அறிவிப்பை வெளியிட்டுள்ளது. மேற்கண்ட விதிகள் கடந்த ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வரப்பெற்றுள்ளது. திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள் 2026ன் படி, கீழ்க்காணும் அளவு கோல்களில் ஏதேனும் ஒன்றைப் பூர்த்தி செய்யும் நிறுவனங்கள் அல்லது நிலையங்கள் “பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள்” ஆக வகைப்படுத்தப்படு கின்றன.

அதாவது, 20,000 சதுர மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட மொத்த தள பரப்பளவு கொண்ட கட்டிடம் அல்லது தினசரி 40,000 லிட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீர் பயன்பாடு, மேலும் தினசரி 100 கிலோ அல்லது அதற்கு மேற்பட்ட திடக்கழிவு உற்பத்தி செய்பவர்கள் வகைப் படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வரையறை, நிறுவன பயனாளர்கள், வணிக நிறுவனங்கள், குடியிருப்பு சங்கங்கள், சொசைட்டிகள், ஓட்டல்கள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், ஐ.டி.பூங்காக்கள், திருமண மண்டபங்கள், வணிக வளாகங்கள், சந்தைகள், தொழிற்சாலைகள் மற்றும் பிற பெரிய நிறுவனங்களையும் உள்ளடக்கும். திடக்கழிவுகள் மேலாண்மை2026 விதிமுறைகளின் படி, சென்னை மாநகராட்சி வரம்பிற்குள் உள்ள அனைத்து பெருமளவு கழிவு உற்பத்தியாளர்களுக்கும் சில விதிமுறைகள் அறிவிக்கப்படுகின்றன.

அதன்படி, பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள், சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் பதிவு செய்வது கட்டாயமாகும். அனைத்து தகுதியுடைய பெருமளவு கழிவு உற்பத்தியாளர்களும், சமபந்தப்பட்ட மண்டல அலுவலர்களிடமிருந்து கடிதம் பெற்ற நாளிலிருந்து 15 நாட்களுக்குள் சென்னை மாநகராட்சியின் இணைய தளத்தில் பதிவு செய்வது கட்டாயமாகும். குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவு செய்யாதவர்களுக்கு திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள் 2026ன் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள் தேவையான குப்பைத் தொட்டிகளை கொள்முதல் செய்து, கழிவுகளை தரம் பிரித்து, சென்னை மாநகராட்சி அல்லது சென்னை மாநகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள் தாங்கள் உண்டாக்கும் உயிரியல் கழிவுகளை தங்கள் வளாகத்திலேயே உரமாக்கல், உயிரி எரிவாயு ஆக்குதல் போன்ற முறைகளில் செயல்படுத்த வேண்டும். பதிவிற்காக தனிப்பட்ட இணைப்பு, சென்னை மாநகராட்சியின் *https://gccservices.in/bulkwaste/register* என்ற இணையதளத்தில் உள்ளது. மண்டல அலுவலர்கள் (மண்டலம் 1 முதல் 15 வரை) நியமிக்க ப்பட்ட பணியாளர்கள், தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள் பெருமளவு கழிவு உற்பத்தியாளர்களுக்கு இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்குத் தேவையான உதவிகளை வழங்குவார்கள்.

எனவே, அனைத்து நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் குடியிருப்பு சங்கங்களும் மேற்கண்ட அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இதுகுறித்த மேலும் விவரங்களுக்கு, சென்னை மாநகராட்சியின் *www.chennaicorporation.gov.in* என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தை பார்வையிட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னை - வேளச்சேரியில் மூதாட்டி பாலியல் வன்கொடுமை!

## மேலும் 3 பேரை பிடிக்க முடியாமல் போலீசார் திணறல்!

சென்னை, மே 30 - சென்னை வேளச்சேரியில், மூதாட்டி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டவழக்கில்2வடமாநில இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அதில் தொடர்புடைய மேலும்3பேரைபிடிக்கமுடியாமல் போலீசார் திணறி வருகின்றனர்.

வேளச்சேரி பகுதியில் உள்ளஉணவகங்களில்பணிபுரியும்பீகார்இளைஞர்கள் முகமது மஹலாப், முகமது ஆதில் ஆகியோர், நள்ளிரவில் பேருந்து நிலையம் அருகே சென்று டீ குடித்துள்ளனர். அறைக்கு திரும்பும் வழியில், நின்றிருந்த மூதாட்டி டீ குடிக்க பணம் கேட்டுள்ளார். டீ வாங்கித் தருவதாக கூறி, மூதாட்டியை ரேபிடோ பைக்புக்செய்து அழைத்துச் சென்றுள்ளனர். பைக் டாக்சி ஓட்டுநரிடம் மூதாட்டி தங்களது தாயார் என்றும், டீ குடித்துவிட்டு வீட்டிற்கு அழைத்துச் செல்வதாகவும் கூறியுள்ளனர்.

இதையடுத்து,டாக்சிஓட்டுநர் மஹலாப்பையும், மூதாட்டியையும் அழைத்துச்சென்று, மஹலாப்தங்கியிருந்தஅறைஅருகேவிட்டு விட்டு சென்றுள்ளார். முகமது ஆதில் நடந்தே அறைக்கு வந்ததாக தெரிகிறது.

இதையடுத்து, அருகே உள்ள மாநகராட்சி பூங்காவுக்கு அழைத்துச் சென்று, மூதாட்டியை மிரட்டியும் கட்டாயப்படுத்தியும் இருவரும் பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். பின்னர், இருவரும் தங்களது அறைக்கு சென்றுவிட்டனர். மூதாட்டி சாலையில் ரத்த காயங்களுடன் அழுது கொண்டே நின்றிருந்ததைப் பார்த்த அந்த வழியாகச்சென்றவாகனஓட்டிகள், இதுகுறித்து போலீசாருக்கு தகவல் அளித்தனர். போலீசார் மூதாட்டியை மீட்டு மருத்துவமனையில்சேர்த்தனர்.

விசாரணையில் 5 பேர் தன்னை மிரட்டி பாலியல் வன்கொடுமை செய்ததாக மூதாட்டி தெரிவித்துள்ளார். இதற்கிடையே, அறைக்கு திரும்பிய மஹலாப்பும்,ஆதிலும்,பயத்தில் மூதாட்டிக்கு என்ன ஆனது என பார்க்க மீண்டும் மாநகராட்சி பூங்கா வுக்கு சென்றுள்ளனர். அப்போது, வழியில் அவர்களை மறித்த ரோந்து காவலர், சந்தேகத்தின் பேரில், இருவரையும் புகைப்படம்எடுத்துமேலதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளார். இதற்கிடையே, மூதாட்டி விவகாரத்தை விசாரணைநடத்தியபோலீசார்சி.சி.டி.வி.பதிவுகள்மற்றும் காவலர் அனுப்பிய புகைப்படங்கள் அடிப்படையில், மஹலாப்பையும், ஆதிலையும்கைதுசெய்தனர்.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய மேலும் 3 பேரை பிடிக்க முடியாமல் போலீசார்திணறிவருகின்றனர்.

# சட்டமன்றத்தொகுதி-களஆய்வு!

திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில் மாவட்டச் செயலாளர் அர.சக்கரபாணி அறிவிப்பின்படி கீழ்க்கண்ட விபரப்படி களஆய்வு நடைபெற உள்ளது.

திண்டுக்கல் மேற்கு மாவட்டத்திற்கான குழுவில் பருதி இளம்சுருதி, ஜி.பி.ராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு வருகின்ற 31.05.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு வேடசந்தூர், ஆ.மகாலிலும்,

நத்தம் சட்டமன்றத் தொகுதிக்கு வருகின்ற 01.06.2026 திங்கள் கிழமை காலை 10.00 மணிக்கு நத்தம், கழக அலுவலகத்திலும்,

ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்கு வருகின்ற 02.06.2026 செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிக்கு ஒட்டன்சத்திரம், காமாட்சி திருமண மண்டபத்திலும் இக்குழு நிர்வாகிகளை தனித்தனி குழுக்களாக சந்தித்து களஆய்வு செய்ய உள்ளனர்.

குறிப்பு:

காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை தொகுதி பார்வையாளர்கள், தொகுதிக்குட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு களஆய்வு நடைபெறும்.

மாலை 3.00 மணி முதல் 6.00 மணி வரை மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள் கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், கிளை கழகச் செயலாளர்கள், நகர, பேரூராட்சிகளுக்குட்பட்ட வார்டு செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2) கழக முன்னோடிகளுக்கு களஆய்வு நடைபெறும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 28.5.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## வாகனங்களுக்கு இடையூறாக பிளக்ஸ் பேனர் வைத்ததை

# தட்டிக்கேட்ட போலீஸ்காரரின் கையை உடைத்த த.வெ.க. நிர்வாகிகள்!

## கும்பகோணத்தில் பரபரப்பு!

கும்பகோணம், மே 30 - கும்பகோணத்தில் வாகனங்களுக்கு இடையூறாக பிளக்ஸ் பேனர்கள் வைத்து த.வெ.க. நிர்வாகிகளை தட்டி கேட்ட போலீஸ்காரரின் கையை உடைத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் அம்மன் கோயில் திருவிழா நடந்து வருகிறது. திருவிழாவுக்கு அமைச்சர் வினோத்தை வரவேற்று நேற்றுமுன்தினம் இரவு த.வெ.க.வினர் நால்ரோடு பகுதியில் தஞ்சாவூர்மயிலாடுதுறை சாலையை இணைக்கும் இடத்தில் வாகனங்கள் செல்ல முடியாத வகையில் பேனர்களை குறுக்கே வைத்தனர்.

அப்போது அந்த வழியாக இரவு ரோந்து சென்ற போலீஸ்காரர் தேவநாதன்(35), அவர்களை கண்டித்து சாலையின் குறுக்கே வைத்திருந்த பேனரை அகற்றும்படி கூறினார். அவர்கள் அகற்றாததால் போலீஸ்காரரே பேனரை அகற்ற முயன்றபோது தவெக நிர்வாகிகளான பைராகிதோப்பை சேர்ந்த அருண் (21) மற்றும் காளி (30) ஆகியோர் தேவேந்திரனை சரமாரியாக தாக்கி அவரது வலது கையை பிடித்து முறித்து விட்டு அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர்.

இதில் போலீஸ்காரர் தேவநாதனின் வலது கையின் மணிக்கட்டு பகுதியில் எலும்பு முறிவு ஏற்பட்டது. தகவலறிந்து சென்ற போலீசார், அங்கு வலியால் துடித்த தேவநாதனை மீட்டு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னர், மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தேவநாதன் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து போலீசார் வழக்கு பதிந்து அருண், காளியை கைது செய்து விசாரித்து வருகின்றனர். இந்நிலையில், போலீஸ்காரரின் கையை உடைத்தது த.வெ.க. நிர்வாகிகள் இல்லை என காவல்துறை சார்பில் விளக்கம் அளிக்கப் பட்டுள்ளது. ஆனால், போலீஸ்காரரின் கயை உடைத்த இருவரும் த.வெ.க. கட்சி சார்பில் வைக்கப்பட்ட பேனரில் அவர்களின் படம் இடம் பெற்று உள்ளது. இந்த வீடியோ சமூகவலைதளங்களில் வைரலாகி வருகிறது.




157 வது வட்ட கழகத்தில் நடைபெற்ற வட்டக் கழக இளைஞரணி, மாணவரணி, பாக தகவல் தொழில்நுட்ப அணி அவசர ஆலோசனை கூட்டத்தை வட்ட கழக செயலாளர் டி.ரவி தலைமை ஏற்று நடத்தினார். இக்கூட்டத்தில் மாவட்ட கழக இளைஞரணி அமைப்பாளர் கோல்ட் டி.பிரகாஷ், மாவட்ட கழக மாணவர் அணி துணை அமைப்பாளர் கலாநிதிகுணாளன், பகுதி கழக இளைஞரணி அமைப்பாளர் பிரவீன்குமார் உரையாற்றினர். இக்கூட்டத்தில் பகுதி துணை அமைப்பாளர் ஐ.அழகேசன் ,வட்ட கழக அவைத் தலைவர் பா.முனுசாமி, வட்ட பொருளாளர் நிர்மல் பிரபு, பகுதி பிரதிநிதி ஏ.விஜயகுமார், பகுதி அமைப்பாளர் பா.ஞானசங்கர், கழக முன்னோடி செல்வராஜ், BLA 2 பாபு, பகுதி துணை அமைப்பாளர் தனா, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் சொ.சஞ்சீவி, பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளர் மு.வீரமணி, மற்றும் வட்ட கழக இளைஞரணி மாணவரணி தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# நாகை அ. அம்பலவாணன்

## மே 30 (2020)



கழகம் துவக்கப்பட்ட 1949ஆம் ஆண்டே முத்தமிழறிஞர் கலைஞரை அழைத்து, நாகை, ஆழியூரில் பொதுக்கூட்டம் நடத்தியவர்.

1961–ல் சிக்கலில் கிளைக் கழகத்தை இவர் உருவாக்கியபோது, பேரறிஞர் அண்ணா அவர்களே நேரடியாக கிளை அலுவலகம் வந்து, கிளை குறிப்பேட்டில் கையொப்பமிட்டு சென்றார்.

கீழத் தஞ்சை மாவட்டச் செயலாளர், நாகை மாவட்டச் செயலாளர் என பல்வேறு கழகப் பொறுப்புகளை வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரது அன்பையும் நன்மதிப்பையும் பெற்றவர்.

தஞ்சை மாவட்ட வேளாண் விற்பனைக்குழு தலைவராக பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

2017ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில் ‘பாவேந்தர் பாரதிதாசன் விருது’ வழங்கப்பட்டது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**